# ரஷ்யா அனுப்பிய லூனா-25 விண்கலம் நிலவில் விழுந்து நொறுங்கியது

## கடைசி சுற்றுவட்டப் பாதையில் நுழைந்தபோது சிக்கல்

**மாஸ்கோ**

நிலவுக்கு ரஷ்யா அனுப்பிய லூனா-25 விண்கலம், தரை இறங்குவதற்கு முந்தைய சுற்றுவட்டப் பாதையில் நுழையும் போது கட்டுப்பாட்டை இழந்து, கீழே விழுந்து நொறுங்கியது.

நிலவுக்கு ரஷ்யா கடந்த 1976-ம் ஆண்டு லூனா-24 என்ற விண்கலத்தை அனுப்பியது. அதன்பின்னர், 47 ஆண்டுகள் கழித்து, லூனா-25 என்ற விண்கலத்தை கடந்த 11-ம் தேதி சோயுஸ் ராக்கெட் மூலம் நிலவுக்கு அனுப்பியது. திறன் மிக்க உந்துவிசை இன்ஜின் பொருத்தப்பட்டிருந்ததால், பூமி மற்றும் நிலவின் சுற்றுவட்டப் பாதைகளை முழுமையாக கடந்து செல்லாமல், குறுக்கு வழியில் விரைவாக சென்று நிலவை 10 நாளில் நெருங்கியது.

லூனா விண்கலத்தை, நிலவின் தென்துருவ பகுதியில் இன்று தரையிறக்க ரஷ்ய விண்வெளி ஆய்வு மையமான 'ராஸ்காஸ்மாஸ்' விஞ்ஞானிகள் திட்டமிட்டிருந்தனர். அதற்காக லூனா-25 விண்கலத்தை, தரையிறக்குவதற்கு முந்தைய சுற்று வட்டப் பாதையில் நுழைக்கும் முயற்சியில் விண்வெளி ஆய்வு மையத்தின் கட்டுப்பாட்டு அறையில் உள்ள விஞ்ஞானிகள் நேற்று முன்தினம் ஈடுபட்டனர். அப்போது ஏற்பட்ட அசாதாரண சூழல் காரணமாக, லூனா-25 விண்கலத்தின் தகவல் தொடர்பு துண்டானது. விண்கலத்தை கண்டுபிடிக்கவும், அதை மீண்டும் தொடர்பு கொள்ளவும் கடந்த 2 நாட்களாக மேற்கொண்ட முயற்சிகள் பலன் அளிக்கவில்லை.

இந்நிலையில், லூனா-25 விண்கலம் கட்டுப்பாட்டை இழந்து, நிலவின் இறுதிகட்ட சுற்றுப் பாதையைவிட்டு விலகி கீழே விழுந்து நொறுங்கியதாக ராஸ்காஸ்மாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

ரஷ்யாவின் விண்வெளி ஆய்வுப் பணியில் இது பெரும் பின்னடைவாக கருதப்படுகிறது. லூனா-25 விண்கலம் விழுந்து நொறுங்கியதற்கான காரணங்களை ஆராய சிறப்பு ஆணையம் அமைக்கப்பட்டுள்ளது.



ரஷ்யாவின் லூனா-25 விண்கலம் நிலவை நோக்கி கடந்த 15-ம் தேதி சென்று கொண்டிருந்தபோது, அதில் இருந்த கேமரா எடுத்த புகைப்படத்தில் ரஷ்ய விண்வெளி மையத்தின் முத்திரை மற்றும் ஆய்வுக் கருவியின் பாகம் ஆகியவை தெரிகின்றன.

EVA STALIN

## அம்பேத்கர் சட்ட பல்கலைக்கழகத்தில்
# ஜி-20 சுற்றுலா உச்சி மாநாடு தொடக்கம்

**சென்னை**

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்ட பல்கலைக்கழகத்தில் சுற்றுலா குறித்த 3 நாள் ஜி-20 உச்சி மாநாடு தொடங்கியது. நாடு முழுவதும் உள்ள பல்வேறு பல்கலைக் கழகங்களை சேர்ந்த மாணவர்கள் இதில் பங்கேற்றுள்ளனர்.

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்ட பல்கலைக்கழகம் சார்பில் சுற்றுலா குறித்த ஜி-20 உச்சி மாநாடு பல்கலைக்கழக வளாகத்தில் நேற்று தொடங்கியது. சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி என்.ஆனந்த் வெங்கடேஷ் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். தமிழக சட்டத் துறை செயலர் கார்த்திகேயன், சட்டக் கல்வி இயக்குநர் விஜயலட்சுமி ஆகியோர் கவுரவ விருந்தினர்களாக பங்கேற்றனர்.

நாடு முழுவதும் உள்ள பல்வேறு பல்கலைக்கழகங்களை சேர்ந்த ஏராளமான மாணவர்கள் கலந்துகொண்டு, பசுமை சுற்றுலா, திரைப்பட சுற்றுலா, கலாச்சார சுற்றுலா, குறு சிறு நடுத்தர தொழில் நிறுவனங்கள் உள்ளிட்டவை குறித்தும், உலக அளவில் சுற்றுலா துறையில் இருக்கும் முக்கிய பிரச்சினைகள் குறித்தும் விரிவாக ஆலோசித்தனர்.

மாநாட்டின் 2-ம் நாள் நிகழ்ச்சிகள் இன்று நடைபெறுகின்றன. இதில் சுற்றுலா பங்குதாரர்கள், கொள்கை உள்ளிட்டவை குறித்து குழு விவாதம் நடைபெற உள்ளது. மாநாடு நாளை (ஆக.22) நிறைவடைகிறது. நிறைவு விழாவில் தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பேச உள்ளார். குழு விவாதத்தில் வெற்றி பெறும் மாணவ, மாணவிகளுக்கு ரூ.46 ஆயிரம் ரொக்கப் பரிசு வழங்கப்படுகிறது.

அண்ணா நகர் கிழக்கு கிளை
எண்.A12, IIவது அவென்யூ, அண்ணா நகர் கிழக்கு, சென்னை - 600102 Ph.: 044-2621 6549 / 2621 6550, E mail- cb0974@canarabank.com
Canara Bank கனரா வங்கி
கோரிக்கை அறிவிப்பு (பிரிவு 13(2)) கடன்தாரர்/ஜாமீன்தாரர்/அடமானதாரர்
கடன்தாரர்கள்: M/s செர்ரி டீக் என் ஓக் பர்னிச்சர் பிரைவேட் லிமிடெட், எண்.3/62, டெக் பம்பீஸ் டவர், குமரன் நகர், செம்மஞ்சேரி, OMR, சென்னை - 600 119, பதிவு அலுவலகம்: பல்லாவரம் கேஷாரும் - எண். 93/A, 200 அடி ரேடியல் ரோடு, ஜமீன் பல்லாவரம், சென்னை -

# லேப்டாப், கம்ப்யூட்டர் இறக்குமதிக்கு கட்டுப்பாடு ஏன்?

க.ஆனந்தன்
anandhan.k@hindutamil.co.in

**லேப்டாப்கள், டேப்லெட்கள் மற்றும் கம்ப்யூட்டர்கள் உள்ளிட்ட தகவல் தொழில்நுட்பத் துறை (ஐ.டி.) ஹார்டுவேர் சாதனங்கள் இறக்குமதிக்கு கட்டுப்பாடு விதிக்கப்படுவதாக கடந்த 3-ம் தேதி மத்திய வர்த்தகம் மற்றும் தொழில் துறை அமைச்சகம் திடீரென அறிவித்தது. இது உடனடியாக அமலுக்கு வரும் என அறிவிக்கப்பட்டது. எனினும், அடுத்த நாளே இந்த கட்டுப்பாடுகள் நவ.1-ம் தேதி முதல் அமலுக்கு வரும் என வெளிநாட்டு வர்த்தக இயக்குநரகம் (டிஜிஎப்டி) கடந்த 4-ம் தேதி அறிவித்தது. எவ்வகையான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன என்றும் இதற்கான காரணம் என்ன என்பது குறித்து பார்ப்போம்.**

மத்திய அரசின் அறிவிப்பின்படி, புதிய சட்டங்களின் கீழ் லேப்டாப்கள், டேப்லெட்கள் கம்ப்யூட்டர்கள், சர்வர்கள் உட்பட எச்எஸ்என் 8741 பிரிவின் கீழ் வரும் ஐ.டி. ஹார்டுவேர் சாதனங்களை இறக்குமதி செய்யும் நிறுவனங்கள் உரிமம் பெற வேண்டியது அவசியம். இதன்மூலம் சர்வதேச நிறுவனங்கள் புதிய வகை லேப்டாப் மற்றும் கம்ப்யூட்டர்களை உலக சந்தையுடன் சேர்த்து ஒரே நேரத்தில் இந்தியாவிலும் அறிமுகப்படுத்த முடியாது.

வெளிநாட்டிலிருந்து தாயகம் திரும்புவோர் சில பொருட்களை தங்கள் பைகளில் கொண்டு வருவதற்கு விதிகளுக்குட்பட்டு (அவ்வப்போது மாற்றப்படும்) அனுமதிக்கப்படுகிறது. இந்த விதிகளுக்கு இந்த கட்டுப்பாடு பொருந்தாது.

ஒரே ஒரு லேப்டாப் அல்லது கம்ப்யூட்டரை இணையதள வணிக நிறுவனங்களிடமிருந்து கொரியர் அல்லது அஞ்சல் மூலம் வாங்குவோருக்கு இறக்குமதி உரிமத்திலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. அதேநேரம் அதற்கு உரிய இறக்குமதி வரி செலுத்த வேண்டும்.

ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு, மதிப்பீடு, பழுது பார்த்தல் மற்றும் மறு ஏற்றுமதி உள்ளிட்ட சில காரணங்களுக்காக 20 லேப்டாப் அல்லது கம்ப்யூட்டர்கள் வரை இறக்குமதி செய்வதற்கு உரிமம் பெறுவதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. அதேநேரம் எந்த நோக்கத்துக்காக இறக்குமதி செய்யப்பட்டதோ அந்த நோக்கத்துக்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும். அந்த பொருட்களை விற்கக் கூடாது. மேலும் அந்த நோக்கம் நிறைவேறியதும் மீண்டும் ஏற்றுமதி செய்துவிட வேண்டும்.

கடந்த 2014-ம் ஆண்டு செப்டம்பர் 25-ம் தேதி 'உள்நாட்டில் தயாரிப்போம்' (மேக் இன் இந்தியா) திட்டத்தை பிரதமர் மோடி தலைமையிலான மத்திய அரசு அறிமுகம் செய்தது. இறக்குமதியைக் குறைத்து உள்நாட்டு உற்பத்தியை ஊக்குவிக்கவும் வேலை வாய்ப்பை அதிகரிக்கவும் இந்த திட்டம் அமல்படுத்தப்பட்டது. நாட்டின் ஒட்டுமொத்த உற்பத்தியில் (ஜிடிபி) உற்பத்தித் துறையின் பங்கை 2022-ல் 25% ஆக உயர்த்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. ஏற்றுமதியை அதிகரிக்க வேண்டும் என்பதும் மத்திய அரசின் இலக்காக உள்ளது.

இதையடுத்து, இந்த திட்டத்தை ஊக்குவிப்பதற்காக மத்திய அரசு முதலில் இறக்குமதி வரியை அதிகரித்தது. இதனால் பல வெளிநாட்டு நிறுவனங்கள் இந்தியாவில் உற்பத்தியை தொடங்கின. அடுத்தகட்டமாக உற்பத்தி அடிப்படையிலான ஊக்கத்தொகை (பிஎல்ஐ) திட்டத்தை மத்திய அரசு கடந்த 2020-ம் ஆண்டு அறிமுகம் செய்தது. இது வாகனம், ரசாயனம், மின்னணு சாதனங்கள் உட்பட 14 துறைகளுக்கு வழங்கப்படுகிறது. இதன்படி பதிவு செய்துகொள்ளும் நிறுவனங்களுக்கு அதன் உள்நாட்டு உற்பத்தி மதிப்பில் 4 முதல் 6% வரை ஊக்கத்தொகை வழங்கப்படுகிறது. இதனால் மேலும் பல வெளிநாட்டு நிறுவனங்கள் இந்தியாவில் உற்பத்தி ஆலையை தொடங்கின.

இந்த பிஎல்ஐ திட்டத்தின் கீழ் ஸ்மார்ட் போன் உற்பத்திக்காக 5 ஆண்டுகளுக்கு ரூ.41 ஆயிரம் கோடி ஒதுக்கப்பட்டது. இந்த திட்டத்தின் கீழ் 32 நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதையடுத்து, சீனாவைச் சேர்ந்த முன்னணி செல்போன் நிறுவனங்கள் பிஎல்ஐ திட்டத்தைப் பயன்படுத்தி இந்தியாவில் உற்பத்தியை தொடங்கின. இதன்மூலம் கடந்த நிதியாண்டில் ரூ.3.5 லட்சம் கோடி மதிப்பிலான செல்போன்கள் இந்தியாவில் உற்பத்தி செய்யப்பட்டன. இதுபோல சிப் மற்றும் செமிகண்டக்டர் உற்பத்தி நிறுவனங்களும் கணிசமான அளவில் பிஎல்ஐ திட்டத்தின் கீழ் இந்தியாவில் உற்பத்தியை தொடங்க முன்வந்துள்ளன.

கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்பு ஸ்மார்ட் டிவி இறக்குமதிக்கு மத்திய அரசு தடை விதித்தது. இதையடுத்து ஸ்மார்ட் டிவி உற்பத்தியும் இந்தியாவில் அதிகரித்தது.

அந்த வகையில் கம்ப்யூட்டர் தொடர்பான சாதனங்கள் உற்பத்திக்காக பிஎல்ஐ திட்டத்தின் கீழ் ரூ.16,900 கோடியை மத்திய அரசு ஒதுக்கி உள்ளது. இதற்கு விண்ணப்பம் செய்வதற்கான கடைசி தேதி வரும் 30-ம் தேதி ஆகும். ஆனால், எதிர்பார்த்த அளவுக்கு இத்துறை சார்ந்த நிறுவனங்கள் இந்த திட்டத்தில் இணையவில்லை என கூறப்படுகிறது.

இதனிடையே, கடந்த 2022-23 நிதியாண்டில் கம்ப்யூட்டர் தொடர்பான இறக்குமதி ரூ.84 ஆயிரம் கோடியாக இருந்தது. இதில் கம்ப்யூட்டர், லேப்டாப் இறக்குமதி மட்டும் ரூ.44 ஆயிரம் கோடி ஆகும். இதில் சுமார் 75% சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்படுகிறது. இது ஆண்டுதோறும் 6% அளவில் அதிகரித்து வருகிறது.

இந்நிலையில்தான் லேப்டாப், கம்ப்யூட்டர் இறக்குமதியை குறைத்து உள்நாட்டு உற்பத்தியை ஊக்குவிப்பதற்காக மத்திய அரசு புதிய கட்டுப்பாடுகளை விதித்ததாகக் கூறப்படுகிறது.

மின்னணு சாதனங்கள் மற்றும் செயலிகள் மூலம் வேவு பார்த்தல், தகவல் திருட்டு உள்ளிட்ட இணையதள குற்றச் செயல்கள் அதிகரித்து வருகின்றன. இந்நிலையில், லேப்டாப், கம்ப்யூட்டர் இறக்குமதிக்கு தடை விதிக்க முடிவு செய்ததற்கு பாதுகாப்பு அம்சமும் ஒரு முக்கிய காரணம் என மத்திய அமைச்சர் பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

மத்திய அரசின் புதிய உத்தரவுக்குப் பிறகு 44 வன்பொருள் (ஹார்டுவேர்) நிறுவனங்கள் பிஎல்ஐ திட்டத்தின் கீழ் இந்தியாவில் உற்பத்தியை தொடங்க விண்ணப்பம் செய்துள்ளன.




### தட்டுப்பாடு ஏற்படும்

பண்டிகை கால விற்பனை தொடங்க உள்ள நிலையில் மத்திய அரசு இந்த திடீர் உத்தரவை பிறப்பித்துள்ளது. இதனால் லேப்டாப், கம்ப்யூட்டர்களுக்கு குறுகிய காலத்துக்கு தட்டுப்பாடு ஏற்பட்டு அவற்றின் விலை உயர்வுக்கு வழிவகுக்கும். குறிப்பாக உள்நாட்டு உற்பத்தியை ஊக்குவிக்க வேண்டும் என்பதுதான் அரசின் நோக்கம் என்றால் தொழிற்சாலையை இந்தியாவில் நிறுவ உரிய அவகாசம் தர வேண்டும் என்பது இத்துறை சார்ந்தவர்களின் கோரிக்கை ஆகும்.

இந்நிலையில், இந்த காலக்கெடுவை 9 மாதங்கள் முதல் ஓராண்டு வரை தள்ளி வைக்க வேண்டும் என டெல், எச்.பி., லெனோவோ, சாம்சங், ஏசர், ஆப்பிள் உள்ளிட்ட நிறுவனங்களின் அதிகாரிகள் மத்திய அரசின் உயர் அதிகாரிகளை சந்தித்து கோரிக்கை வைத்துள்ளனர்.

இந்த நிறுவனங்கள் இந்திய சந்தையை தக்கவைத்துக் கொள்வதற்காக உள்நாட்டில் உற்பத்தியை தொடங்க வேண்டிய கட்டாயத்துக்கு தள்ளப்பட்டுள்ளன. இதனால் இங்கு வேலை வாய்ப்பு அதிகரிப்பதுடன் இந்திய பொருளாதார வளர்ச்சியிலும் முக்கிய பங்கு வகிக்கும்.

### அந்நியச் செலாவணி மிச்சமாகும்

சீனாவுடனான வர்த்தக பற்றாக்குறை கடந்த 2022-23 நிதியாண்டில் ரூ.6.9 லட்சம் கோடியாக இருந்தது. இந்நிலையில், அந்நாட்டிலிருந்து இறக்குமதி செய்வது குறையும் போது வர்த்தக பற்றாக்குறை குறையும். இரண்டாவதாக, இறக்குமதிக்காக செலவிடப்படும் கோடிக்கணக்கான அமெரிக்க டாலர் அந்நியச் செலாவணி பெருமளவில் மிச்சமாகும்.

மூன்றாவதாக, உலகின் மிகப்பெரிய தகவல் தொழில்நுட்பத் துறை வன்பொருள் உற்பத்தி சந்தையாக இந்தியா உருவெடுக்கும். நான்காவதாக, வரும் 2025-26-ல் உள்நாட்டு மின்னணு சாதன உற்பத்தியில் தன்னிறைவு பெறுவதுடன் வரும் 2026-ல் நாட்டின் மின்னணு சாதன பொருட்கள் உற்பத்தி மதிப்பை ரூ.25 லட்சம் கோடியாக அதிகரிக்க மத்திய அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது. இந்த இலக்கை எட்டுவதில் இந்த கட்டுப்பாடுகள் பெரிதும் உதவும் என்று மத்திய அரசு கருதுகிறது.

### நிலவின் தென் துருவத்தில்

# சந்திரயானின் 'லேண்டர்' கலன் நாளை மறுநாள் தரை இறங்குகிறது

**இறுதிகட்டப் பணிகளில் இஸ்ரோ விஞ்ஞானிகள் தீவிரம்**

**சென்னை**

நிலவில் தரையிறங்கி ஆராய்வதற்காக சந்திரயான்-3 விண்கலத்தை இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனம் (இஸ்ரோ) சுமார் ரூ.615 கோடியில் வடிவமைத்தது. இந்த விண்கலம் எல்விஎம்-3 ராக்கெட் மூலம் கடந்த ஜூலை 14-ம் தேதி விண்ணில் செலுத்தப்பட்டது. அதன்பிறகு, பூமியை சுற்றிவந்த விண்கலம் ஆக.1-ம் தேதி பூமியின் ஈர்ப்பு விசையில் இருந்து விலக்கப்பட்டு நிலவை நோக்கி செல்லுமாறு அதன் பயணப் பாதை மாற்றப்பட்டது. 5 நாள் பயணத்துக்கு பிறகு, ஆக.5-ம் தேதி நிலவின் சுற்று வட்டப் பாதைக்குள் சந்திரயான் நுழைந்தது.

நிலவில் பத்திரமாக லேண்டரை தரையிறக்குவதற்கான பணி வரும் 23-ம் தேதி மாலை 5.30 மணி அளவில் மேற்கொள்ளப்பட உள்ளது. எதிர் விசையை பயன்படுத்தி லேண்டரின் வேகம் படிப்படியாக குறைக்கப்படும். அதன் வேகம் பூஜ்ஜிய நிலையை எட்டியதும், அதில் உள்ள சென்சார்கள் மூலம் தரையிறங்குவதற்கான சரியான இடம் தேர்வு செய்யப்பட்டு, நிலவில் மெதுவாக விண்கலம் தரையிறக்கப்படும்.

நிலவில் லேண்டரை தரையிறக்குவதுதான் இத்திட்டத்திலேயே மிகவும் சவாலான பணி. இதற்கு 15 நிமிடம்தான் ஆகும் என்றபோதிலும், 4 ஆண்டுகால உழைப்புக்கான முழுவெற்றியும் இதில்தான் அடங்கியுள்ளது. கடந்த முறை சந்திரயான்-2 திட்டம் இந்த கட்டத்தில்தான் தோல்வியை சந்தித்தது என்பதால், அந்த அனுபவத்தின் அடிப்படையில் சந்திரயான்-3 லேண்டரில் பல்வேறு மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. எனவே, இந்த முறை லேண்டர் வெற்றிகரமாக நிலவில் தடம் பதிக்கும் என்று இஸ்ரோ விஞ்ஞானிகள் நம்பிக்கை தெரிவித்தனர். லேண்டர் தரையிறங்கிய பிறகு, அதில் உள்ள ரோவர் வாகனம் வெளியே வந்து தனது ஆய்வுப் பணியை மேற்கொள்ளும்.

இதுகுறித்து இஸ்ரோ வெளியிட்ட அறிவிப்பில், 'லேண்டர் கலன் சீரான இயக்கத்தில் உள்ளது. தொடர்ந்து லேண்டர் தனது உட்புற சோதனைகளை செய்து கொண்டு, தரையிறங்க நிர்ணயிக்கப்பட்ட பகுதியில் சூரிய உதயத்துக்காக காத்திருக்கும். அனைத்து செயல்பாடுகளையும் முடித்து, நிலவின் தென்துருவத்தில் ஆக.23-ம் தேதி மாலை 6.04 மணிக்கு லேண்டர் தரையிறங்கும்' என்று கூறப்பட்டுள்ளது.



↑ நிலவில் பத்திரமாக லேண்டர் கலன் தரையிறங்க வாழ்த்தி, சென்னை கோட்டூர்புரம் அண்ணா நூற்றாண்டு நூலகம் அருகே சாலையோரம் வைக்கப்பட்டுள்ள சந்திரயான்-3 மாதிரி. படம்: எஸ்.சத்தியசீலன்




# நவீன அடிமைகளா சுயநிதிக் கல்லூரிப் பேராசிரியர்கள்?



**அருண்கண்ணன்**
பேராசிரியர்
தொடர்புக்கு: arunkannandr@gmail.com

தமிழ்நாட்டில் மொத்தம் 2,657 கல்லூரிகள் உள்ளன. அவற்றில் 2,020 கல்லூரிகள் சுயநிதிக் கல்லூரிகள். சுயநிதிக் கல்லூரிகளில் பணிபுரியும் ஆசிரியர்களும் ஆசிரியர் அல்லாத பணியாளர்களும் மிக மோசமான பணிச் சூழலில் உழல்கின்றனர். இக்கல்வி நிறுவனங்கள் மாணவர்களிடமிருந்து அதிகக் கட்டணம் வசூலிப்பதாகக் குற்றச்சாட்டுகள் தொடர்ந்து எழுப்பப்பட்டு வருகின்றன.

இதன் காரணமாக, நம் கல்வியின் தரம் பெரிதும் பாதிக்கப்படுவதாகப் பலரும் சுட்டிக்காட்டுகின்றனர். இதைச் சரிசெய்ய, இந்நிறுவனங்களைக் கட்டுப்படுத்தும் வகையில் சட்டம் ஒன்றை இயற்றுமாறு திமுக அரசு பொறுப்பேற்றது முதல் பலரும் கூறிவருகின்றனர். அரசு இதில் கவனம் செலுத்தாததால், இக்கல்வி நிறுவனங்களின் எதேச்சதிகாரப் போக்கு தொடர்கிறது.

**அலைக்கழித்த நிர்வாகம்:** சென்னையில் உள்ள சுயநிதிக் கல்லூரி ஒன்றில் பணிபுரியும் பேராசிரியர் ஒருவர், அண்மையில் தனது மனைவிக்குப் பணிமாறுதல் கிடைத்ததால் தன்னைப் பணியிலிருந்து விடுவிக்குமாறு நிர்வாகத்திடம் விண்ணப்பித்திருக்கிறார். அக்கல்லூரி நிர்வாக விதிகளின்படி ஒருவர் வேலையிலிருந்து விலகுவதற்கு ஒரு மாதம் முன்பாகத் தகவல் தெரிவித்துவிட வேண்டும். அவரும் முதலில் ஒருமாத காலம் பணிபுரிந்து விட்டுச் செல்வதாக ஒப்புக்கொண்டுள்ளார். பிறகு, தவிர்க்க இயலாத காரணங்களுக்காக 20 நாட்கள் பணிபுரிந்த பிறகு தன்னை விடுவிக்குமாறு நிர்வாகத்திடம் கேட்டுள்ளார். நிர்வாகம் அக்கோரிக்கையை மறுத்ததுடன், மூன்று மாதச் சம்பளத்தைக் கொடுத்துவிட்டுச் செல்லுமாறு அவரை நிர்ப்பந்தித்துள்ளது. பணத்தைச் செலுத்தினால் மட்டுமே அவருடைய அசல் சான்றிதழ்களைத் திருப்பித் தர முடியும் என்றும் பிடிவாதம் காட்டியது.

அப்பேராசிரியர் வேறுவழியின்றிக் குடும்ப உறுப்பினர்களை அழைத்துச் சென்று, அக்கல்லூரி நிர்வாகத்திடம் இறைஞ்சிக் கேட்டதால் பணிவிடுப்பு மற்றும் அசல் சான்றிதழ்கள் கிடைத்துள்ளன. ஆனால், எல்லா நிறுவனங்களும் இப்படித் 'தாராள மனதுடன்' சான்றிதழ்களைக் கொடுத்துவிடுவதில்லை. சில நேரங்களில் நிறுவனங்களின் பிடிவாதப் போக்கால் பேராசிரியர்கள் மிகப் பெரிய பாதிப்புக்கு உள்ளாகின்றனர்.

**பேராசிரியரின் மரணம்:** 2010ஆம் ஆண்டு கிண்டி அண்ணா பல்கலைக்கழகத்தில் தங்கப்பதக்கம் பெற்ற ஓர் இளைஞர், சுயநிதிக் கல்லூரியில் ஆசிரியர் பணியில் சேர்ந்தார். பிறகு, சில கல்லூரிகளில் பணிபுரிந்தவர் 2018இல் சென்னையில் உள்ள ஒரு சுயநிதிப் பொறியியல் கல்லூரியில் பணியில் சேர்ந்தார். தான் அண்ணா பல்கலைக்கழகத்தில் தற்காலிகப் பேராசிரியர் பணிக்காக விண்ணப்பித்துள்ளதாகவும் தனக்குப் பணி கிடைக்கும்பட்சத்தில் தன்னை இப்பணியிலிருந்து விடுவிக்க வேண்டும் என்றும் நேர்முகத் தேர்வின்போதே கோரியிருந்தார். அது ஒப்புக்கொள்ளப்பட்டதால்தான் பணியில் சேர்ந்தார்.

சில மாதங்களுக்குப் பிறகு அண்ணா பல்கலைக்கழகத்தில் பணிவாய்ப்பு கிடைத்தது. முதலில் அவரை விடுவிக்க மறுத்த சுயநிதிக் கல்லூரி நிர்வாகம், பிறகு அவருடைய அசல் சான்றிதழ்களைத் தரமறுத்தது. இதற்கு எதிராகப் பல கட்டப் போராட்டங்களை நடத்திக் கொண்டிருந்த அப்பேராசிரியர், திடீரென ஒருநாள் தற்கொலை செய்துகொண்டார். நிர்வாகம் கொடுத்த தொடர் அழுத்தம் காரணமாகவே அவர் இறந்தார் என்பது குடும்பத்தாரின் குற்றச்சாட்டு. அவரது மரணத்துக்குப் பிறகுதான் பேராசிரியர்களிடமிருந்து தனியார் கல்வி நிறுவனங்கள் அசல் சான்றிதழ்களை வாங்கிவைத்துக்கொள்ளும் நடைமுறை தவறு என்று விமர்சனங்கள் எழத் தொடங்கின.

அதே காலகட்டத்தில், தனியார் கல்வி நிறுவனங்கள் பேராசிரியர்களிடமிருந்து அசல் சான்றிதழை வாங்கிவைத்துக் கொள்ளக் கூடாது என்று அகில இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் குழுமம் (AICTE) அண்ணா பல்கலைக்கழகமும் சுற்றறிக்கை அனுப்பின. இதேபோல் பல்கலைக்கழக மானியக் குழுமம் 2020இல் சுற்றறிக்கை அனுப்பியது. இச்சுற்றறிக்கைகள் கள நிலைமையில் பெரிய மாற்றங்களை ஏற்படுத்தவில்லை என்பதுதான் நிதர்சனம்.

கடந்த ஆட்சிக் காலத்தின் இறுதியில், அரசுக் கல்லூரியில் உள்ள பேராசிரியர் காலிப் பணியிடங்களுக்கான அறிவிப்பு வெளியிடப்பட்டது. அதற்கு விண்ணப்பிப்பதற்கு அசல் சான்றிதழும் பணி அனுபவச் சான்றிதழும் பேராசிரியர்களுக்குத் தேவைப்பட்டன. இதைப் பயன்படுத்திக்கொண்டு சில சுயநிதிக் கல்லூரிகள் பணம் பறிக்கும் வேலையில் இறங்கின. தாங்கள் பணிபுரிந்த அனுபவச் சான்றிதழையும், அசல் சான்றிதழையும் திரும்பப் பெறுவதற்குப் பணம் கொடுக்க வேண்டிய அவலநிலை பேராசிரியர்களைக் கொந்தளிக்கவைத்தது.

**பொய்த்துப்போன நம்பிக்கை:** ஆட்சி மாற்றம் ஏற்பட்டவுடன், பேராசிரியர்களின் அசல் சான்றிதழ்களைக் கல்வி நிறுவனங்கள் திருப்பித் தர ஆணையிடுமாறு உயர் கல்வித் துறைச் செயலரிடம் சுயநிதிக் கல்லூரி ஆசிரியர் சங்கம் கோரியது. அதனைத் தொடர்ந்து உயர் கல்வித் துறையும் சுற்றறிக்கை ஒன்றைக் கல்வி நிறுவனங்களுக்கு அனுப்பியது. ஆனால், அதைக் கல்வி நிறுவனங்கள் மதித்து நடந்ததாகத் தெரியவில்லை.

ஒரு சுயநிதிக் கல்லூரி நிர்வாகம், தனது ஆசிரியர்களுக்கு அண்மையில் ஒரு சுற்றறிக்கையை அனுப்பியுள்ளது. அதில் பேராசிரியர்களின் சில அசல் சான்றிதழ்களை நிர்வாகத்திடமிருந்து திரும்பப் பெற ரூ.5,000 செலுத்த வேண்டும் என்றும், அனைத்துச் சான்றிதழ்களையும் திரும்பப் பெற வேண்டுமெனில், ஒரு மாதச் சம்பளத்தை வழங்க வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளது. அசல் சான்றிதழ்களைப் பேராசிரியர்களிடமிருந்து வாங்கும் பெரும்பாலான கல்வி நிறுவனங்கள், அவர்களிடம் ஒரு ஒப்புகைக் கடிதத்தைக்கூடத் தருவதில்லை என்பது இன்னொரு கொடுமை. ஒருவேளை நிர்வாகம் தங்களிடம் சான்றிதழ்கள் இல்லை என்று வாதிட்டால் அதை மறுப்பதற்குச் சம்பந்தப்பட்ட பேராசிரியரிடம் எந்த ஆதாரமும் இருக்காது.

**அதிர்ச்சியளித்த கல்லூரி:** சில ஆண்டுகளுக்கு முன்னால், சென்னையில் உள்ள சுயநிதிக் கல்லூரி ஒன்றில் பணிபுரிந்த பேராசிரியர் ஒருவர், வேறு வேலை கிடைத்ததும் கல்லூரி நிர்வாகத்தை அணுகி, உடனடியாக விடுவிக்கக் கோரினார். முதலில் மூன்று மாதச் சம்பளத்தை வழங்கிவிட்டுச் செல்லச் சொன்னது நிர்வாகம். அவரும் அதைத் தர ஒப்புக்கொண்டார். ஆனால், நிர்வாகம் அவரைப் பணியிலிருந்து விடுவிக்க விரும்பவில்லை. எனவே, அசல் சான்றிதழ்களைத் திருப்பித்தராமல் காலம் தாழ்த்திவந்தது. விளைவாக, புதிய வேலையில் சேர்வதில் அவருக்குச் சிரமம் ஏற்பட்டது. திடீரென அக்கல்லூரி நிர்வாகம் தங்களிடம் அவருடைய அசல் சான்றிதழ்கள் இல்லை என்றும் இருந்த சிலவற்றையும் முன்பே கொடுத்துவிட்டதாகவும் கூறி, கல்லூரியிலிருந்து அவரை வெளியே அனுப்பியது. இப்படி, அசல் சான்றிதழ்களை வைத்துக்கொண்டு தனியார் கல்வி நிறுவனங்கள் செய்யும் அராஜகங்களின் பட்டியல் மிக நீளமானது.

பேராசிரியர்கள் உடனடியாகத் தங்களை விடுவிக்கக் கோரும்போது இவ்வளவு கறாராக இருக்கும் தனியார் கல்வி நிறுவனங்கள், பேராசிரியர்களை உடனடியாகப் பணியிலிருந்து நீக்கும்போது, எந்த விதிகளையும் பின்பற்றுவதில்லை. சுயநிதிக் கல்வி நிறுவனங்கள் ஒரு மாதச் சம்பளத்தைக் கொடுத்தெல்லாம் பேராசிரியர்களைப் பணியிலிருந்து விடுவிப்பதாகத் தெரியவில்லை.

எனவே, பேராசிரியர்களுக்கு எதிரான கொடுமைகள் சுயநிதிக் கல்லூரிகளில் அன்றாடம் நடக்கும் வாடிக்கையாகிவிட்டதுதான் சமூகத்தின் அவலம். ஆசிரியர்கள் இப்படியான சூழலில் பணிபுரிவது இக்கல்லூரிகளில் பயிலும் 12 லட்சத்துக்கும் மேற்பட்ட மாணவர்களின் கற்றல் செயல்பாட்டைப் பாதிக்கும் என்பது அரசுக்குத் தெரியாதா? தங்களுடைய சுயமரியாதையைக் காப்பாற்றிக்கொள்ள முடியாமல் தவிக்கும் இப்பேராசிரியர்கள், சுயமரியாதையுடன் வாழ மாணவர்களுக்கு எப்படி கற்றுத்தர முடியும்?

தனியார் உயர் கல்வி நிறுவனங்களின் இத்தகைய அராஜகப் போக்கை இன்றைய திமுக அரசும் கண்டுகொள்ளாமல் இருப்பது அதன் சமூக நீதிக் கொள்கைக்கு எதிரானதாகும். சமூக நீதியை உயர்த்திப் பிடிக்கும் திராவிட மாடல் ஆட்சியில், இத்தகைய சமூக அவலங்களை எப்படி நாம் தொடர அனுமதிப்பது? எனவே, சுயநிதிக் கல்லூரிகளைக் கட்டுப்படுத்தத் தனியான சட்டத்தைக் கொண்டுவருவது உடனடித் தேவையாகும். இந்த ஆட்சியில் பல்வேறு துறைகளில் மாற்றம் வரும் என்று மக்கள் நம்புகின்றனர். அந்த நம்பிக்கையை நிறைவேற்றுவது அரசின் கடமை! ●